IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE,
TIRUVANNAMALAI.

O.S. No. 32/2021

02.08.2023 – **வா.சா.1 திருமதி. உண்ணாமலை** சத்திய வாக்குமூலத்தின் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

1ம் பிரதிவாதி பழனி எனது மகன் என்றால் சரிதான் . எனது தந்தை பெயர் மாணிக்க கவுண்டர் என்றால் சரிதான் . எனது தாயார் பெயர் அமிர்தம்மாள் என்றால் சரிதான். சின்னம்மாள் என்பவர் எனது தந்தையின் அக்கா என்றால் சரிதான். அமிர்தம்மாள் எனது தந்தை மாணிக்க கவுண்டரின் இரண்டாவது மனைவி என்றால் சரிதான் . எனது தந்தை அவரது அக்காவின் மகள் எல்லம்மாளை தான் முதலில் திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான் . எல்லம்மாளுக்கும் எனது தந்தைக்கும் குழந்தைகள் பிறக்கவில்லை என்றால் சரிதான். எல்லம்மாள் இறந்த பிறகு தான் எனது தாயார் அமிர்தம்மாளை எனது தகப்பனார் திருமணம் செய்தார் என்றால் சரிதான் . அமிர்தம்மாளுக்கும் எனது அப்பாவுக்கும் நான் மட்டும் தான் வாரிசு என்றால் சரிதான் . எனக்கு உடன் பிறந்தவர்கள் யாரும் இல்லை . நான் ஒரே மகள் என்பதால் எனது திருமணத்திற்கு பிறகும் எனது தாயார் என்னுடனே வாழ்ந்துவந்தார் என்றால் சரிதான். எனது தாயார் எங்கு வெளியில் சென்றாலும் என்னுடன் தான் செல்வார். அவருக்கு நான் எந்த குறையும் வைக்கவில்லை . அமிர்தம்மாள் அவரது பெயரில் உள்ள சொத்தை 1ம் பிரதிவாதிக்கு தானம் எழுதி வைத்தார் என்றால் சரிதான் . தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் எனது மருமகன் முருகன் மற்றும் அவரது அப்பா மாணிக்கம் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள் என்று சொன்னால் எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்தவற்கு முன்பாக போளூர் நீதிமன்றத்தில் நான் ஒரு வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான் . போளூரில் தாக்கல் செய்த ஓ .எஸ் நெம்பர் 182/2013 வழக்கானது தற்போது கலசப்பாக்கத்திற்கு மாறுதல் ஆகி ஓ ,எஸ் 77/2019 ஆக உரிமையியல் நீதிமன்றத்தில் இருந்து பிறகு தீர்ப்பாகிவிட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் சர்வே எண் 89/1பி 0.07 ஏர்ஸ் நிலம் எனக்கு

சொந்தமானது என்றும் உரிமைகோரியும் தடைஉத்தரவு கோரியும் தாக்கல் செய்திருந்தேன் என்று சொன்னால் சரிதான் . அதே வழக்கில் சர்வே எண் 89/1 எப் 0.13.0 ஏர்ஸ் நிலத்திற்கு உரிமை கோரவில்லை என்றால் சரிதான். அது விற்பனை ஆகிவிட்டதால் நான் கோரவில்லை . போளூரில் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேன் என்றால் சரிதான் . என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 தான் அந்த வழக்கறிஞர் அறிவிப்பு என்றால் சரிதான். நான் பாகம் கேட்டு தான் அந்த அறிவிப்பை கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் என்னுடன் வசிக்கும் அம்மா அமிர்தம்மாள் பேரிலும் 1ம் பிரதிவாதி பேரிலும் கிரையம் பெற்ற நபர்களின் பேரிலும் பாகம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ல் எனது தாயாரும் 1ம் பிரதிவாதியும் சேர்ந்து கூட்டு சதி செய்து 3ம் நபருக்கு இந்த வழக்கு சொத்தை கிரையம் செய்ய ஏற்பாடு செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு தெரியாமல் என்னுடைய துணை இல்லாமல் எங்கு போகமாட்டார் என்றால் சரிதான் . ஆகவே என்னுடைய துணையில் தான் எனது அம்மா , எனது கணவர், மருமகன், மருமகனின் அப்பா ஆகியோர்கள் சேர்ந்து 1ம் பிரதிவாதிக்கு வழக்கு சொத்தை தான செட்டில்மெண்ட் எழுதி வைத்தோம் என்றால் சரியல்ல. எனது மருமகனும், மருமகனின் அப்பாவும் தான செட்டில்மெண்டில் கையொப்பம் போட்டுள்ளதால் எனக்கு தெரியாமல் தான செட்டில்மெண்ட் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

/ உண்மை நகல் / ஒம்/- P. மதுசூதனன்,

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.